உ
சிவமயம்



யாழ்ப்பாணம் இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும்
ஜேர்மனி சுவெற்றா நகரை வசிப்பிடமகவும் கொண்ட

உயர்திரு அமரர்

# கணபதிப்பிள்ளை செந்தில்குமார்

சிவபதமடைந்ததை முன்னிட்டு வெளியிடப்பட்ட

# நினைவு மலர்


07.10.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும்
ஜேர்மனி சுவெற்றா நகரை வசிப்பிடமகவும் கொண்ட

உயர்திரு அமரர்

# கணபதிப்பிள்ளை செந்தில்குமார்

அவர்கள்

மண்ணுலகம்
19.09.1957

விண்ணுலகம்
07.09.2009

திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விரோதிதனில் ஆவணி இருபத்தியிரண்டில்
பூண்ட ரேவதி புகர் நாளில் - வேண்டியன்றோ
நண்ணும் திருதியை மாலை நாடினனே செந்தில்குமார்
கண்ணுதலான் இன்பக் கழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து
அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
எம்மை எல்லாம் அரவணைத்து
நல்வழிப்படுத்திய எங்கள் அன்புத்
தெய்வத்தின் பாதங்களில்
இந்நினைவுமலரினைச்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் துவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் னுனைநாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பொம்மா னிவனன்றே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலா கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றஎங் சிவனைத்
திருவீழி மிழலைவீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னியதில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியதளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணிமாலையும் முடிமீதே
அணிந்த ஈசன பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடுதூதுவர் நலியாதே
அசந்த போதேன் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் திரு அமரர் கணபதிப்பிள்ளை செந்தில்குமார் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழவள நாட்டின் தலைப்பாகமாக விளங்கும் யாழ்ப்பாண நகரிலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள கிராமம் இணுவில். சைவமும், தமிழும், இசையும், கலையும் செழித்தோங்கி விளங்கும் கிராமம் என்று பெருமை பெற்றது இணுவில். கிழக்கு, மேற்கு, தெற்கு என மூன்று பெரும்பிரிவுகள் இணுவில் கிராமத்தில் இருக்கின்றன. கோண்டாவில், தாவடி, பாலாவோடை, உடுவில், மருதனார்மடம், உரும்பராய் என்ற கிராமங்களுக்கு மத்தியில் இலங்கும் இணுவில் கிராமத்தில் ஏராளமான கோயில்களும் விளங்குகின்றன.

இங்கு பெரும்பாலும் விவசாயம் செய்பவர்களே அதிகம் வசிக்கின்றனர். அரச உத்தியோகம், ஆசிரியர் பணி, சிறு தொழில் செய்வோர் என்போரும் இங்கு உள்ளனர். பணப்பயிர்களான புகையிலை, வெங்காயம் போன்ற பயிர்கள் பெரும்பான்மையாகவும், மரக்கறிகள் சிறுபான்மையாகவும் பயிரிடப்படும் தோட்டக்காணிகள் இணுவில் கிராமத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இருக்கின்றன.

இணுவில் மேற்கில் அமைந்துள்ள இணுவில் கந்தசுவாமி கோவில் அருகாமையில் உயர் சைவக் குடியில் வந்த அம்பலவாணர் குஞ்சிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனாக அவதரித்தவர் திரு கணபதிப்பிள்ளை அவர்கள். அவர் அதே இடத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை முத்து தம்பதியரின் இரண்டாவது மகளான ஜனகம்மா எனும் நங்கையை மணம் புரிந்தார். அவர்கள் வாழ்ந்த வீடு இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் கோயிலுக்கும், இணுவில் கந்தசுவாமி கோயிலுக்கும் இடையில் அமைந்திருந்தது. கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ் இந்துக்கல்லூரியில் கல்வி கற்றுப் பின் அரச எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்து பணியாற்றினார். தனது கூர்த்த மதியினாலும், உழைப்பினாலும் அரச பணியில் சிறப்புற்று விளங்கினார். சுகாதாரத் திணைக்களத்தில் நீண்டகாலம் பணியாற்றிய கணபதிப்பிள்ளை அவர்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் பணியாற்றிய காலத்தில் இலங்கையின் பலபாகங்களுக்கும் சென்று கடமை புரிந்துள்ளார். மற்றவர்களை ஆதரித்து உதவி செய்வதிலும், அறியாதோருடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமையாகப் பழகுவதிலும் வல்லவரான கணபதிப்பிள்ளை அவர்கள் தமது குடும்பத்தினர் ஆதரவோடு தோட்டச்செய்கையிலும் ஈடுபட்டார்.

1979ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட காலத்தில் இணுவில் கந்தசுவாமி கோவிலின் தர்மகர்த்தா சபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட கணபதிப்பிள்ளை அவர்கள் அதன் தலைவராக கடமைபுரிந்தார். தனது குலதெய்வமான இணுவில் கந்தனின் கோவிலை பராமரிக்கக் கிடைத்தது தனது மிகப்பெரிய பாக்கியம் எனக் கருதிப் பணிபுரிந்தார்.

கணபதிப்பிள்ளை தம்பதியர் தமது இல்லறவாழ்வின் இலக்கியமாக மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். மூத்தவர் வத்சலா எனும் பெண். அடுத்தவர் செந்தில்குமார் எனும் ஆண்பிள்ளை. இவர் 1957 செப்ரம்பர் மாதம் 19ஆம் திகதி பிறந்தார். செந்திலுக்கு உற்றதுணையாக, இனிய சகோதரியாக வந்துதித்தவர் குலமதி. வதசலா உடல், உள்ள வளர்ச்சி குன்றியபோதும் பெற்றோர்களையும், சகோதர்களையும் இனங்கண்டு கொண்டாடுவதில் வல்லவராக இருந்தார். பெற்றோருடனும், சகோதரருடனும் ஜேர்மனியில் வசித்த காலை அவர் அங்கே காலமாகிவிட்டார். குலமதி தனது தாய்வழி மைத்துனரான வினாசித்தம்பி கலாதரனை மணந்து ஜேர்மனியில் சுவேற்றா நகரில் வசிக்கிறார்.

செந்தில் என உறவினர்களாலும் நண்பர்களாலும் அழைக்கப்படும் செந்தில்குமார் சிறுவயது முதலே தந்தையைப் போல மற்றவர்களை அரவணைத்து நடாத்துவதிலும், இலகுவில் ஏனையோருடன் பழகுவதிலும் வல்லவராக விளங்கினார். தந்தையார் அரச உத்தியோகம் பார்த்தவராகையால் குழதைகளை கண்ணும் கருத்துமாக வளர்த்தார். அவர்கள் குழந்தைப் பருவத்தில் செல்வச்செழிப்போடு வாழ்ந்தனர். செந்தில் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் (தற்போது இணுவில் இந்துக்கல்லூரி) தனது ஆரம்பக் கல்வியைக் கற்றுப் பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியைத் தொடர்ந்தார். பள்ளிப்பருவத்தில் இணுவில் மற்றும் அயல் கிராமங்களில் உள்ள இளைஞர்களுடன் மிகுந்த நட்புறவோடு இருந்தார். அவரை அறியாதவர்கள் இணுவிலின் அயல் கிராமங்களில் இருக்கமாட்டார்கள். தந்தைக்கு உதவியாக தோட்டச்செய்கையிலும் ஈடுபட்டவர் செந்தில். இணுவில் கந்தசுவாமி கோயில் தீர்தத்திருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயகாரராக அம்பலவாணரும் அவரைத் தொடர்ந்து பின்னர் அவரின் மகன் கணபதிப்பிள்ளையும் விளங்கினர். தந்தை உபயகாரராக இருக்கையில் செந்தில்குமார் தீர்த்தத் திருவிழாவை வெகுவிமரிசையாகக் கொண்டாடுவதில் சிரத்தை காட்டினார்.

தந்தையின் முயற்சியால் செந்தில் 1977இல் கட்டிடத்திணைக்களத்தில் மேற்பார்வையாளர் பதவி பெற்று கொழும்பு சென்றார். அங்கு தனது தந்தையார் தங்கியிருந்த அதே விடுதியில் தங்கியிருந்து வந்தோரை வரவேற்று உபசரித்து மகிழ்ந்தார். அவரின் ஒன்றுவிட்ட சகோதரர்களான கதிர்காமத்தம்பி மகேந்திரன், மாசிலாமணி தேவராஜா, மாசிலாமணி சிறீதரன் ஆகியோருடன் விடுதியை ஒரு குட்டி இணுவிலாகவே மாற்றியிருந்தார். பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியின் பிரிவில் கட்டிடப் பராமரிப்புப் பிரிவில் அவர் பணிபுரிந்த காலை பாராளுமன்ற உறுப்பினர்களின் அன்பைப் பெற்றவராக விளங்கினார். எனினும் அதனை தனது சுயநலத்திற்காக அவர் என்றும் பயன்படுத்தியதில்லை.

வாரவிடுமுறை என்றால் இரவு இரயில் பிடித்து இணுவிலுக்கு வந்துவிடும் செந்தில் இரண்டே நாளில் ஞாயிறு இரவு தபால் இரயிலில் கொழும்பு திரும்புவது வாடிக்கையாக இருந்தது. கொழும்பு கோட்டையிலிருந்து இணுவிலுக்கு இரயில் பெட்டியின் வாயிலில் இருந்தபடி பயணம் செய்வது அவருக்குப் பழகிப்போயிருந்தது. தனது சகோதரியின் பள்ளித்தோழியான ரஜீவியை விரும்பிய செந்திலுக்கு இணுவிலுக்கு வருவது இரட்டிப்பு மகிழ்ச்சியாகவே இருந்தது. இரு குடும்பத்தாரும் இவர்களின் இணைப்பை அங்கீகரித்தனர்.

1983இல் அரங்கேறிய இலங்கை இனக்கலவரத்தைத் தொடர்ந்து செந்தில் ஜேமனி சென்றார். அங்கு அவரின் மைத்துனர் கலாதரனும் சென்றார். ஜேர்மனினிக்கு அவர் சென்ற காலத்தில் அங்கு வரும் ஊரவருக்கு ஊருணி நீர் நிறைந்தாற்போல உதவினார். உதவி நாடி வந்தோர் எல்லோருக்கும் உதவி செய்த உத்தமராக விளங்கினார். தன் நிலை மறந்தாலும், மற்றவர் துன்பம் துடைப்பதில் என்றும் முன்னின்றார். ஜேர்மனியில் அயல்நாடுகளில் வாழும் இணுவில் இளைஞர்களில் செந்தில் வீட்டை அறியாதவர்கள் இருக்கமாட்டர்கள். ஜேர்மனிக்கு சென்ற சிறிது காலத்திலேயே சிறு வியாபரம் செய்வதில் அக்கறை காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988ஆம் ஆண்டு இலங்கை திரும்பிய செந்தில்குமார் தன் அன்புக்குரியவளும், கோண்டாவில் பசுபதிப்பிள்ளை ஆசிரியரின் மூன்றாவது மகளுமான ரஜீவியை இணுவிலில் ஊரார் கூடி வாழ்த்த திருமணம் செய்தார். திருமணம் முடித்த சிறிது காலத்திலேயே அவர்கள் ஜேர்மன் திரும்பிவிட்டனர். அவர்களைத் தொடர்ந்து செந்திலின் பெற்றோரான கணபதிப்பிள்ளை ஜனகம்மா தம்பதியினர் தமது இரு மகள்களுடன் ஜேர்மனி சென்று தம் புதல்வனோடு வாழ்ந்து வந்தனர். செந்தில் தனது தங்கை குலமதிக்கு தனது மைத்துனர் கலாதரனை ஜேர்மனியில் திருமணம் செய்துவைத்தார்.

ஜேர்மனியில் இல்லறம் நடாத்திவந்த செந்தில்குமார் ரஜீவி தம்பதிகளுக்கு செந்தூரி, செந்நிலானி, செந்துசன், செஞ்ஜீவ் என நான்கு குழந்தைச் செல்வங்கள் கிடைத்தன. அவர்களில் செந்தூரி தற்போது டுசுல்டோவ் பல்கலைக்கழகம் செல்கிறார். அவரின் தங்கை செந்நிலானி 13ஆம் வகுப்பு (FBG Gymnasium) படிக்கிறார். மகன் செந்துசன் 9ஆம் வகுப்பு (FBG Gymnasium) வகுப்பிலும் செஞ்ஜீவ் 6ஆம் வகுப்பு (FBG Gymnasium) வகுப்பிலும் படிக்கின்றனர். சுவேற்றா நகரில் உள்ள தமிழ்ப் பள்ளியான தமிழாலயத்தில் தனது பிள்ளைகளைச் சேர்த்து தமிழ்க் கல்வியூட்டினார் செந்தில். இப்போது அவரின் இரு மகள்மாரும் அங்கே தமிழாசிரியராக இருந்து "இவன் தந்தை என்னோற்றான்" என மற்றவரை வியக்கவைத்துள்ளனர்.

செந்தில்குமாரின் தாய்மாமனின் பேரனான கோபி எனப்படும் சுந்தரலிங்கம் கோபினாத் தனது சிறுவயதில் குலமதியின் அரவணைப்பில் வளர்ந்தவர். சித்தப்பா என செந்திலை உறவுகொண்டாடும் கோபியும் ஜேர்மனியில் இவர்களோடு சேர்ந்து கொண்டார். நல்லதொரு குடும்பமாக இன்ப வாழ்க்கை வாழ்ந்தனர். கோபி செந்திலுக்கு உற்றதுணையாக விளங்கியதோடு தமிழாலயத்தின் உற்ற துணைவராகவும் விளங்குகின்றார்.

செந்தூராஸ் என்ற வர்த்தக நிறுவனத்தை சிலகாலம் நடத்திவந்த செந்திலுக்கு வியாபாரத் தந்திரங்கள் தெரிந்திருக்கவில்லை. இளகிய மனமும், இரங்கும் சுபாவமும் கொண்ட செந்திலால் அந்தத் தொழிலை தொடர்ந்து நடத்த முடியவில்லை.

ஜேர்மனியில் இருக்கும் காலத்தில் இணுவில் கந்தசுவாமி கோயில் தீர்த்தத்திருவிழா உபயத்திற்காக பணம் அனுப்புவதையும், அவ்வப்போது தானே தனியாகவும், குடும்பத்துடனும் சென்று வருவதைய வாடிக்கையாக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மன் சென்ற அடுத்த வருடமே செந்திலின் தந்தையார் அம்பலவாணர் கணபதிப்பிள்ளை அவர்கள் காலமானார். தந்தையைத் தொடர்ந்து அவரின் மூத்த மகளான வத்சலாவும் அங்கு காலமாகிவிட்டார். 2003இல் செந்தில்குமாரின் அருமைத் தாயாரும் அங்கேயே காலமாகிவிட்டார். பெற்றோர் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் அவர்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துவந்தார் செந்தில்.

நான்கு ஆண்டுகளுக்கு முன் பக்கவாத நோயினால் பீடிக்கப்பட்ட செந்தில் அதற்கென பல வைத்திய முறைகளையும் மேற்கொண்டார். இந்தியா சென்றும் வைத்தியம் செய்தார். மூன்று மாதங்களுக்கு முன்னர் வீட்டில் நித்திரையில் இருந்தபோது அவர் மீண்டும் அதே நோயின் தாக்குதலுக்கு ஆளானார். சுய நினைவற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் தனது இறுதிக்கணம் வரை அங்கேயே இருந்தார். அவ்வப்போது கண்திறந்து பார்த்து வந்தோரை ஆச்சரியப்படுத்தி வந்த செந்தில்குமார் செப்டம்பர் மாதம் 7ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு திருதியை திதியில் இவ்வுலக வாழ்வை நீக்கி புகழுடம்பு எய்தினார். அவரின் மறைவுச் செய்தி ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே இங்கிலாந்து, இலங்கை, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் உள்ள அவரின் உறவினர்களுக்கு பேரிடியாக கிடைத்தது.

அவரின் ஆன்மா சாந்தியடைவதாக!

அவரைப் பிரிந்து வாழும் அவரின் மனைவி, மக்கள் மற்றும் சகோதரி குடும்பத்தினருக்கு இப்பெரிய துயரைத் தாங்கும் சக்தியை ஆண்டவன் அருள்வானாக.

*ஓம்! சாந்தி சாந்தி சாந்தி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *மனைவி புலம்பல்*

காதலித்தபோது களிப்புற்றேன்.
கைப்பிடித்தபோது அகமகிழ்ந்தேன்.
குடும்பம் நடத்தியபோது பெருமையடைந்தேன்.
நீங்கள் நோயில் வீழ்ந்தபோது துவண்டு போனேன்.
ஆனால் நீங்கள் என்னை உங்கள் அறிவாலும்
பேச்சாலும் தூக்கி நிறுத்தினீர்கள்.
உங்கள் துணையுடன் வாழ்க்கையை
சீராக்கி நடாத்தினேனே!
இறைவனுக்கு பொறுக்கவில்லையா?
உங்கள் அறிவும், பேச்சும் நின்றபோது
இதயம் வெடித்துப் போனேன்.
இறைவனிடம் மன்றாடினேன், போராடினேன்
இறைவன் கைவிட்டு விட்டான்.
காலனவன் வென்று விட்டான்.
எங்கே சென்றீர்கள்? எங்கள் செந்தூரப் பூக்களை
மணம்பரப்ப விட வேண்டுமே!
அருவமும், உருவமும் இல்லாமல் எங்களுடன்
கலந்து விட்டீர்கள்! என்றும் எனக்குத் துணையாக
இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்.

**மனைவி**
**செ.றஜீவி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் புலம்பல்

பாசமிகுந்த அப்பா
என் அருமை அப்பா!

என் மூத்தபிள்ளை , மூத்தபிள்ளை என்று என்னைச் செல்லமாகச் சொல்வீர்கள். எனது உயர்வகுப்புப் பரீட்சை முடிவு வரப்போகிறது, என்று அம்மா பயப்படும்போது ,,என்ர பிள்ளை பாஸ் பண்ணுவாள்,, நீ பயப் படாதே! நம்பிக்கையுடன் இரு! என்று அம்மாவைத் தேற்றினீர்களே! தைரியமாக இருந்து எம்மைக் கவனித்தீர்கள். இன்று, நான் பல்கலைக்கழகம் புகும்போது, அதைப் பார்த்துப் பெருமைப்பட நீங்கள் இல்லையே. நான் சோர்ந்து வரும்போதெல்லாம் புத்திமதியும் ஆறுதலும் சொல்லி என்னை உற்சாகப்படுத்தித் தட்டிக் கொடுப்பீர்களே. எமது கலைவெளிப்பாடுகள் மேடையேறுவதைக் கண்டால் மகிழ்வுடன் பார்த்துக் களிப்பீர்கள். நாமும் பெருமைப் படுவோம். எங்கள் முன்னேற்றங்களைக் கண்டு , உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றத்தைக் கண்டு மகிழாமல் சென்றுவிட்டீகளே அப்பா!

உங்கள் துணையுடன் ஒன்றி வாழ்ந்த அம்மாவை விட்டுப் பிரிந்து சென்றீர்களே! அவவின் பிரிவாற்றாமைக்கு உங்களையன்றி யார் தேறுதல் சொல்ல முடியும்? உங்களுக்குப் பணிசெய்த அம்மாவின் கரங்கள் செயலிழந்து நிற்கின்றனவே அப்பா! இதைப் பார்த்துப் பொறுக்கமுடியாமலும் உங்கள் பிரிவுத்துயரைத் தாங்க முடியாமலும் நாம் பரிதவித்து நிற்கின்றோம்.

எங்கள் எல்லோரையும் நடுக்கடலிற் தவிக்கவிட்டுச் சென்றதுபோல் சென்றுவிட்டீர்களே! எங்களை மறக்க எப்படி மனம் வந்தது? உங்கள் அன்பு முகத்தை, பாசமிகு மனத்தை எப்போது காண்பேன் என்று என் மனம் தவிக்கிறதே அப்பா! உங்கள் குரல் என் காதில் ஒலிக்கிறது: ஆனால், உங்களைக் காணவில்லையே. நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து சென்றாலும் என்றும் எங்களுடன் கலந்திருப்பீர்கள். எமக்குத் துணையாக இருப்பீர்கள் என்று தேறுதல் பெறுகிறேன்.

**பாசமிகு மகள்**
**செந்தூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிக்கின்றோம் அப்பா

அன்பே உருவான அப்பா!

நிலாணி! நிலாணி! என்று ஒருநாளைக்கு எத்தனைமுறை ஆசைதீர அழைப்பீர்கள். அந்தக்குரல் இன்று ஓய்ந்து அடங்கிவிட்டதே. இந்த அன்பான குரலை, அழுத்தமான பாசப் பிணைப்பை இனி எப்போது கேட்டுணர்ந்து மகிழப்போகிறேன். அந்தக்குரல் மீண்டும் மீண்டும் என் காதில் வந்து ஒலிக்காதா? ஏன்று ஏங்கித் தவிக்கிறேன் அப்பா! நிலாணி அப்பாவைப்போல என்று எல்லோரும் சொல்வார்களே! அதைக்கேட்டு நான் மகிழ்ச்சி அடைவேன்.

அம்மாவையும் எங்களையும் மறந்து இங்கே விட்டு எங்கே போய்விட்டீர்கள்? உங்களை இழந்து தவிக்கும் அம்மாவுக்கு எம்மால் ஆறுதல் சொல்ல முடியுமா? இதை ஏன் நீங்கள் யோசிக்கவில்லை? நாம் பாடசாலை சென்றுவிட, தனிமையில் இருந்து தவித்து, அழும் அம்மாவுக்கு எப்படி ஆறுதல் சொல்வது? எம்மிடத்தில் நீங்கள் இல்லாவிட்டாலும் உணர்வால் எம்மனத்தில் என்றென்றும் நிலைத்திருந்து வழிகாட்டியாக இருப்பீர்கள். நீங்கள் கூப்பிட்டவுடன் நாம் செய்த வேலையை அப்படியே விட்டுவிட்டு, ஓடிவந்து கேட்டு உதவிகளைச் செய்வோமே அப்பா! எங்களுடன் நீங்கள் இருக்கவேண்டும். உங்களை எப்போது பார்க்கப்போகிறோம் என்று மனம் தவிக்கிறதப்பா! என்றும் எங்களுடன் கலந்திருப்பீர்கள். இது உறுதி: இதை அழிக்க முடியாது.

**அன்புமகள்**
**நிலாணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்கண்ட தெய்வம் நீங்களப்பா!

எந்தன் அருமையான அப்பா!

உங்கள் ஆண்வாரிசு என அகமகிழ்ந்து, செந்துசன்! செந்துசன்! என்று உள்ளத்தில் உவகை பொங்கக் கூப்பிடுவீர்கள். அம்மாவுக்கு அடுத்ததாக உங்களுக்குப் பணிவிடை செய்யும்போது, அதைக் கண்டு நீங்கள் பூரித்துப் போவதைக் கண்டு நான் என்னுள் மகிழ்வேன். உங்கள் கையைப்பிடித்துத் தாங்கிக்கொண்டு கோவிலைச் சுற்றி வரும்போது நான் அனுபவிக்கும் இன்பத்தைச் சொல்லமுடியாதே. இயலாத நிலையில் நீங்கள் இருந்தபோது உங்களின் குரல் ஓயமுன்பு அருகில் வந்துநிற்பேன். இனி அந்தக்குரலை எப்போது கேட்கப்போகிறேன்? வீடு முழுவதும் ஒலித்த உங்கள் குரல் ஓய்ந்ததால் வீடே அமைதியாகிப் பொலிவிழந்து விட்டதே.

அப்பா! நீங்கள் உங்கள் அம்மா, அப்பாவைத் தூக்கிப் பராமரித்துப் பார்த்தது போல நான் பெரியனானபின் உங்களையும் அம்மாவையும் பராமரிப்பேன்: ஈன்றோர் கடமைகளைச் செய்வேன், என்றிருக்க அதை ஏற்காததுபோல் பாதிவயதிற் சென்றுவிட்டீர்களே அப்பா! உங்களுக்கான இறுதிக்கடமைகளை இந்தச் சின்னவனிடமிருந்து பெற்றுச் செல்வதற்கு எப்படி மனம் வந்ததோ அப்பா! உங்கள் சுமையை என்மீது இறக்கிவைத்து ஓய்வு எடுக்கச் சென்றுவிட்டீர்களா? ஒன்றுமே புரியவில்லை.

எம்மை விட்டுத் தூரச் சென்றாலும் உங்கள் புத்திமதிகள் எங்கள் மனத்திற் பசுமரத்தாணிபோல் பதிந்து எம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கும்.

கடவுளாக எங்களுக்கு துணை நிற்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் வாழ்கிறோம் அப்பா! நீங்கள் எங்களுக்குள்ளே நீக்கமற நிறைந்திருப்பீர்கள்.

**செல்வமகன்**
**செந்துசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா! கூப்பிடுவது கேட்கவில்லையா!

அப்பா! என்று கூப்பிட்டு ஓயமுன் ,,ஓம் என்ன,, குரல் கொடுப்பீர்களே! இப்போது நான் கூப்பிட்டும் கேட்கவில்லையா? எங்கு இருக்கிறீர்கள்? எங்களுக்குச் சொல்லாமல் நாங்கள் பார்க்க முடியாத இடத்துக்கு ஏன் போய்விட்டீர்கள்? எடுத்ததற்கு எல்லாம் எங்கள் நால்வரின் பெயரையும் அம்மாவையும் கூப்பிட்டுக் கொண்டிருப்பீர்களே! இப்போது எங்கு இருக்கிறீர்கள்? யாரைக் கூப்பிட்டு உங்கள் தேவைகளை நிறைவேற்றுகிறீர்கள்! சொல்லுங்கள் அப்பா! ஆறுதலுக்கு ஒரு குரல் கொடுங்கள் அப்பா!

கடைசிக்குட்டி நான்: உங்கள் செல்லப் பிள்ளை நான் என்று மகிழ்ச்சியாக செல்லமாக இருந்தேன். நானும் நீங்களும் அப்பா-பிள்ளையாகவா பழகுவோம். குழந்தைகள் போல சண்டை பிடிப்போம்: என் துடுக்குத்தனத்தால் நீங்கள் கோபம் கொண்டு உங்கள் கைத்தடியால் எனக்கு அடிக்க ஓங்குவீர்கள். ஆனால் அடிக்கமாட்டீர்கள் :நான் அழுதால் நீங்கள் தாங்கிக் கொள்ளமாட்டீர்கள். பொய்யழுகை அழுது எனது தேவைகளை உங்களிடமிருந்து நிறைவேற்றியிருக்கிறேன். அதுவும் உங்களுக்குத் தெரியும் அப்பா!

பந்தடித்து விளையாடி நான் கால் நோகிறது என்று அழுதால் "எண்ணெயைக் கொண்டு வா" என்று உடனே கொண்டு வரச்செய்து, அதைப் பூசி இதமாகத் தடவிவிடுவீர்களே. இனி, கால் நோநிறது என்றால் உங்கள் நினைவுதான் வரும். எண்ணெய் பூசிவிட நீங்கள் வரமாட்டீர்களே. நீங்கள் வீடு முழுக்கக் கவனித்துக்கொண்டு சுற்றித் திரிவீர்கள். அழைப் மணி, தொலைபேசி மணிக்கு குரல் கொடுப்பீர்கள். வீடு நிறைந்திருந்தது: இப்போது வெறிச்சோடிக் கிடக்கிறது. பள்ளிக்கூடத்தால் ஓடி வரும்போது அப்பா கதவைத் திறப்பார் என்று எண்ணி அழைப்புமணியை அழுத்தும்போது ஒவ்வொரு நாளும் பார்தத உங்கள் முகத்தைக் காணாமற் கலங்குவேனே. இது தெரியாதா அப்பா உங்களுக்கு?

செல்லமாகக் கட்டி முத்தமிட்டு வளர்த்த என்னை விட்டுப்போக எப்படி மனம் வந்தது? பிள்ளைகள் நால்வரையும் ஒவ்வொருநாளும் கண்ணுக்குள் வைத்து எல்லாரும் வந்துவிட்டார்களா? என்று அறிந்த பின்பே நிம்மதியாக நித்திரை கொள்ளும் நீங்கள் இப்போது தனிமையில் எப்படி நித்திரை கொள்கி றீர்களோ எனக்குத் தெரியாது. எங்கள் படிப்பு முன்னேற்றங்கள், உங்கள் கனவுகள் எல்லாவற்றையும் காணாமற் சென்றுவிட்டீர்களே.

எல்லாவற்றையும் நீங்கள் மறந்து சென்றாலும் நாங்கள் என்றும் உங்களை மறவோம். உங்கள் குரலொலி எம் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கும். உங்களைத் தேடுகிறேன். நீங்கள் எனக்கு வேண்டும்! வேண்டும்.

**செல்லமகன் சென்ஜீவ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாங்கள் மறவோம் உங்களை!

தெய்வத்தின் திருவடிக்கு
தேடி மலர் இட்டவன் நீர்
தேம்பி எம்மை அழவிட்டு அம்பாள்
திருவடிதான் சேர்ந்தாயோ நீ.
சிரித்து எம்மை மகிழ வைத்தாய் அந்த
சிந்தை எம்முன் மறையும் முன்னே
அம்பாள் அடி சேர்ந்த செய்தி எம்மை
சிந்தை கலங்க வைத்ததையா!
மதிப்புடன் வாழ்ந்தவன் நீர்
மரணம் உன்னை அழைத்ததோ!
மங்களங்கள் உன் கரத்தால் மலர்
முகமாய் செய்தவன் நீ உன்
மலர் முகம் காணாது மனம்
உருகி நிற்கின்றோம். என்ன ஐயா
நடந்ததென்று எம்மை விட்டு போனீரோ
கண்ணீரில் நாம் ஆழ்து நிற்க
காற்றோடு நீர் கலந்தீரோ
செந்தில்! செந்தில்!! என வாய்விட்டு அழைத்தோமே
எம்மை விட்டு சென்று செந்தில்! செந்தில்!! என
அழ வைத்தீரே
செந்தில்! செந்தில்!! என அழைத்தோமே எம்மை
ஐயகோ என அழ வைத்தீரே
அன்பராய் நண்பராய் மனதெல்லாம் நின்றவரே
மறைந் தெங்கே சென்றீரோ?

*உம்மைப் பிரிந்து கண்ணீர் மல்கும்*
*சுவெற்றா ஸ்ரீ கனக துர்க்கா அம்பாள் ஆலய குரு*
*சிவ. ஜெயந்திநாதசர்மாவும், நிர்வாகசபையினரும்*
*சுவெற்றா வாழ் தமிழ் மக்களும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பார்வையில் அமரர் செந்திற்குமார்

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”

என்ற வள்ளுவன் வாக்குப்பேணி வாழ்ந்து பாதி வயதில் இறைபதம் அடைந்தவர்தான் திரு. க. செந்திற்குமார்.

சைவமும் தமிழும், கலை, கலாச்சாரங்களும் ஓங்கி வளர்ந்துள்ள இடம் தான் யாழ்ப்பாணம் காங்கேயன்துறை வீதியில் அமைந்துள்ள இணுவில் கிராமம். இக்கிராமத்தின் கிழக்கு மையத்தின் இணுவைக் கந்தன் ஆலயச் சூழலில் அன்பும், பண்பும் இறைபக்தியிற் சிறந்தவர்களான திரு.திருமதி. கணபதிப்பிள்ளை தம்பதியரின் அருமைப் புதல்வனாகப் பிறந்து பெற்றோர், சகோதரிகளின் பாசத்திற் திழைத்து இணுவை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியையும் யாழ் வட்டுக்கோட்டை மகாவித்தியாலயத்தில் உயர்கல்வியையும் பாங்குறக் கற்றுத் தேறினார்.

இலங்கை கட்டிடக் கூட்டுத்தாபனத்தில் அரச ஊழியனாய்ப் பணியாற்றி வரும் நாளில் இனப்பிரச்சினை காரணமாக தாயகம் துறந்து யேர்மனி நாட்டுக்கு வந்தார். யேர்மனி கைல்புறோன் நகரில் வந்த போதுதான் முதல் முதலில் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. சிரித்தமுகம், அன்பான பேச்சு இவையெல்லாம் என்னைக் கவர்ந்தன. அங்கு வாழ்ந்தவர்கள் அனைவரும் இளவல்கள். எனது பெறாமக்கள் சித்தப்பா என அழைப்பதைப்போல் இறுதிவரை என்னைச் சித்தப்பா என்றே அன்பொழுக உறவு கொண்டு அழைப்பார்.

பின் உறவுதேடி சுவேற்றா நகர் வந்து வாழ்ந்தபோது உழைப்பில் ஆர்வங்கொண்டு வியாபாரத்தில் ஈடுபட்டார். இங்கு வாழ் தமிழ்மக்களின் வழிபாட்டுக்கு அமைக்கப்பட்ட ஆலய நிர்வாகக் குழுவில் இணைந்து அரும்பணியாற்றினார். பெற்றோரின் வேண்டுதலுக்கிணங்க ஈழம் சென்று சிறப்புடன் வாழ்ந்த திரு.பசுபதிப்பிள்ளை ஆசிரியரின் மகளை மணம்முடித்து இங்கு வந்து நான்கு மக்கட் செல்வங்களுடன் இல்லற வாழ்வு இனிது நடைபெற்றவேளை, பெற்றோர், சகோதரியையும் அழைத்து வந்து ஒரே குடும்பமாக வாழ்ந்தார். தன் வியாபாரத்தை விருத்தி செய்யும் நோக்குடன் டோட்முண்ட் நகரில் முதல் முதல் செந்தூராஸ் என்ற வர்த்தக நிறுவனத்தை நிறுவி சிலருக்கு வேலை வாய்ப்பளித்து உதவினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இக்கால கட்டத்தில் யேர்மனியில் பல தமிழாலயங்கள் இயங்கி தமிழ்க்கல்வியை முன்னெடுத்துச் சென்றன. என்னைக் காணும் போதெல்லாம் சித்தப்பா சுவேற்றாவில் எமது பிள்ளைகள் கற்கத் தமிழாலயம் ஒன்று அமைக்க வேண்டும் எனக்கோரி அதன் ஆரம்பத்துக்கு வித்திட்டவரும் அவரே. அவரது பிள்ளைகளும் ஆரம்பம் முதல் இறுதிவரை கற்றுத்தேறி, இருவர் ஆசிரியர்களாக பணியாற்றி வருவது அவர்களுக்கு மட்டுமன்றி எமக்கும் மகிழ்வைத் தருகின்றது.

யேர்மனியமொழி, தமிழ்மொழி, கலை, இசை போன்றவற்றில் அவர் பிள்ளைகள் முதன்மைபெற்று பல மேடைகளில் நிகழ்ச்சிகளைச்செய்து பாராட்டும் பெற்றனர். "நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்பதுக்கிணங்க, அவர் எல்லோருக்கும் நல்லவராக வாழ்ந்தார். சுற்றத்தவர்களையும், ஊரவர்களையும், மற்றுமுள்ளோர்களையும் வரவேற்று உபசரித்து, விருந்தோம்பல் செய்து பலரின் திருமணங்களையும் முன்நின்று நிறைவேற்றி வைத்த பெருமை செந்திற்குமாரனுக்குரியது. உறவினரும், அறிமுகமானவரும் செந்தில் வீட்டுக்கு வந்து தாய்வீடு போல உரிமை கொண்டாடிப் போவது வழக்கம்.

இவ்வாறு எல்லாருக்கும் நல்லனாய், இனியனாய் நாடு, மொழி, இனப்பற்று மிக்கவராய் இறை நம்பிக்கை உள்ளவராய் எம்முடன் இனிதே வாழ்ந்த செந்தில் சில காலம் நோயுற்றிருந்த போதும் தேறுவார் என்றே நம்பியிருந்தோம். எல்லார் நம்பிக்கையும் வீணாகிவிட திடீரென அவர் எம்மை விட்டுச் சென்றமை ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தியுள்ளது. அவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள் துன்பம் நீங்கவும், அவர் இறைபதம் பெற்று இன்பம் பெறவும் நாம் அனைவரும் இறைவனை இறைஞ்சுவோமாக!

**இரா. நாகலிங்கம் குடும்பம்**
**காகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரி புலம்பல்

எங்கள் குடும்பம் தழைக்கப் பிறந்த ஒரேயொரு ஆண்குழந்தை என்று எங்கள் அம்மா அப்பா பெருமையுடன் வாழ்ந்து இவ்வுலகை நீத்துச் சென்றுவிட்டனர்.

அண்ணா! நீங்கள் எமது பெற்றோருக்கு அன்பு மகனாக மட்டுமல்ல அக்காவுக்கு ஒரு பாசத்தம்பியாய் எனக்கோ எல்லா விதத்திலும் உதவி, வழிகாட்டும் அண்ணாவாய் வாழ்ந்தீர்கள். திருமணம் செய்து ஒரு அன்புத் துணையாளுக்கு ஏற்ற கணவனாய் பிள்ளைகளுக்கோ பாசத்தைப் பொழியும் அன்புத் தந்தையாய் உற்றாருக்கும் மற்றோருக்கும் உதவும் நண்பனாய் நல்லவனாய் வாழ்வாங் வாழ்ந்தீர்களே அண்ணா!

திருமண உறவுகளால் நாம் பிரிந்து வாழ்ந்தாலும் ஒரே குடும்பம், ஒரேவீடு என்ற பாசப்பிணைப்போடு நாங்களும் எங்கள் பிள்ளைகளும் ஒன்றாகவே வாழ்ந்து மகிழ்ந்தோம். நீங்கள் நோயுற்றபோது நான் பணிவிடை செய்யும்வேளை பெற்றோரோடு கூடிவாழ்ந்த ஞாபகங்கள் தோன்றும். நான் உங்கள் வீட்டுக்கு வந்து அழைப்புமணியை அழுத்தும்போது ,, வாறேன்! வாறேன்! என்று சொல்லிக் கொண்டு கதவைத் திறந்துவிட்டுக் குசலம் விசாரிப்பீர்கள். என் பிள்ளைகளைப் பற்றி அக்கறையோடு விசாரிப்பீர்களே.. உரிமையோடு உங்கள் தேவைகளை என்னிடம் பெற்றுக் கொள்ளும் போது எனக்குப் பாசம் மிகுதியாகும். திடீரெனப் பீடித்த நோயினாற் துன்புறும்போது நான் வேண்டாத கடவுளில்லை. அண்ணா! குலக்கொழுந்தாக இருந்த நீங்கள் எம்மை விட்டுச் சென்றுவிட்டீர்கள். இனி, யாரை அண்ணா! என உரிமையோடு அழைப்பது? விடை காணாமற் தவிக்கின்றேன். உங்கள் குரலை இனி எங்கே கேட்பேன்?

எங்கள் குடும்ப உறவுகளில் அப்பா,அம்மா, அக்கா என்று எல்லோரையும் பறிகொடுத்தாலும் நீங்கள் இருக்கிறீர்கள் என்று இறுமாப்போடு துணிந்திருந்தேனே. ஆனால், இப்போது தனிமரமாக நிற்கிறேன் : தவித்து நிற்கிறேன் அண்ணா!. ,,பிறப்புண்டேல் இறப்பும் உண்டு,, என்பது நியதிதான். ஆனால் பாதிவயதில் போகவேண்டும் என்ற நியதி உங்களுக்கு இருந்தது என்று இப்போதுதான் எனக்குப் புரிகிறது.

அண்ணா! நீங்கள் எம் மத்தியில் இல்லாவிட்டாலும், உங்களைச் சுற்றி எங்கள் நினைவுகள் இருக்கும்.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தின்றோம்.

**அன்புத் தங்கை**
**குலமதி கலாதரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

### மனம் நிறைந்த மாமா

மாமா! செந்தில் மாமா!

எங்களுக்கு ஒரேயொரு மாமா. அவர்தான் செந்தில் மாமா. அம்மாவின் உறவுகளில் ஒன்றாக எஞ்சியிருந்தீர்கள். நீங்களும் எம்மை விட்டுச் சென்றுவிட்டீர்கள். உங்கள் வீட்டுக்கு நாங்கள் வரும்போது ,, கஜன், கஸ்தூ, காருசன் என்று கலகலப்பாகக் கூப்பிட்டு உங்கள் பிள்ளைகளைப் போலவே பாசம் காட்டுவீர்களே. நாங்களும் உங்கள் பிள்ளைகளும் (மச்சாள்,மச்சான்மார்)
சகோதரர்கள்போல நண்பர்கள் போல எங்கும் எப்போதும் ஒன்றாகவே பழகுவோம். ஒரு கோப்பையிலும் உண்போமே. இதையெல்லாம் பார்த்து நீங்கள் மகிழ்வதைப் பார்த்து நாங்களும் மகிழ்வோமே மாமா!

இயலாத வேளைகளில் எனது கையைப் பிடியுங்கள்! என்று எம்மிடம் உதவி கேட்கும்போது துடித்துப் பதைத்து நாமும் உதவி செய்வோமே. மாமா! எங்களோடு ஒன்றாக இருந்துவிட்டு , இடையிலே எம்மைத் தவிக்கவிட்டுச் சென்று விட்டீர்களே. மாமா! மாமா! என்று இனி யாரை அழைக்கப் போகின்றோம். எங்கள் கல்விமுன்னேற்றங்களைப் பற்றி அக்கறையாக இருந்துவிட்டு அவற்றைப் பார்த்துப் பெருமைப்படாமற் சென்றுவிட்டீர்கள். தாய்மாமா என்ற உரிமையையும் எடுத்துச் சென்றுவிட்டீர்கள். மாமா! நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள், உங்களோடு வாழ்ந்த நாட்கள், என்றும் மறையா.

நோயுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தபோது வழமையாக நடப்பதுபோலத் திரும்பி வீட்டுக்கு வருவீர்கள் என நம்பி எதிர்பார்த்திருந்தோம். நீங்களோ எம்மை எமாற்றி விட்டு எங்கே போனீர்கள்? மீண்டும் உங்களை எப்போது காண்போம் மாமா.

**அன்பு மருமக்கள்**
**கஜணவி, கஸ்தூரி, காருசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனர் மைத்துனிகள் புலம்பல்

எங்கள் சகோதரிக்கு வாய்த்த நல்ல இல்லத்துணையாக நீங்கள் அமைந்ததை எண்ணிப் பெருமையும் மகிழ்வும் கொண்டு இறுமாந்திருந்தோம். நக்க ஒருவரின் அன்பும் ஆதரவும் அனுசரிப்பும் இணைந்த பலத்துடன் சகோதரி வாழ்கிறார் என்று நிம்மதியாக வாழ்ந்திருந்தோம். எங்கள் சகோதரியின் அன்புக் கணவராக, எமது மைத்துனராக நாம் உங்களை அடைந்தபோதும் நண்பர்களைப் போலவே நாம் பழகிவந்தோம். எமது மருமக்களின் கல்வி முன்னேற்றம் கண்டு நாம் பெருமையில் மூழ்கியிருந்தோம். நாம் ஏதாவது உதவி கோரியவேளை உடன்செய்யும் உங்கள் மனப்பான்மை கண்டு எமக்குள்ளே திருப்தி ஏற்படும்.

நோய்வாய்ப்பட்டு இயலாத நிலையில் இருந்தாலும் எமது சகோதரிக்குப் பக்கபலமாக, ஆறுதலாக, உறுதுணையாக இருப்பீர்கள் என்றும் சகோதரி உங்களுக்கு ஊன்றுகோலாக இருப்பார் என்றும் நாம் எண்ணியிருந்தோம். இன்று, அவை எல்லாவற்றையும் பகற்கனவாக்கி விட்டுச் சென்றுவிட்டீர்களே! உடல்தான் சற்றுத் தளர்ந்து தன்வேலையைச் செய்யாவிட்டாலும் உங்கள் திறந்த மனமும் பரந்த மனப்பான்மையும் கலகலப்பான பேச்சுத்தொனியும் உங்கள் உறுதிக்குப் பறைசாற்றி நின்றன. எதிர்பாராமலே திடீரென கடுமையான நோய்க்கு உட்பட்டு எமது உடன்பிறப்பையும் எம்மையும் விட்டுப் பாதியிலே உங்கள் வாழ்க்கை அத்தியாயத்தை முடித்துக்கொள்வீர்கள் என நாம் எதிர் பார்க்கவேயில்லை.

உங்களைப் பறிகொடுத்துப் பரிதவிக்கும் எமது அன்புச்சகோதரிக்கு எப்படி எம்மால் ஆறுதல் சொல்ல முடியும்? உங்கள் இடத்தை நிரப்புவதற்கு எவரும் இல்லையே ஐயா! அந்த ஆண்டவன்தான் தங்கைக்கும் பிள்ளைகளுக்கும் ஆறுதலையும் தேறுதலையும் மனத்திடத்தையும் கொடுக்கவேண்டும்.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தின்றோம்.

**மைத்துனர் - மைத்துனிமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் மாமாவின் குலவிளக்கு சடுதியில் அணைந்ததேன்

எங்கள் பெரிய மாமாவினை இழந்த கவலை ஆற முன்னர், இன்னொரு பேரிடியாய் விழுந்தது உங்களின் மறைவு மாமா மாமி என்னும் பாச உறவுகளை இழந்தோம். அவர்களின் முகங்களையும் பார்க்கக் எமக்கு கொடுத்து வைக்கவில்லை. என்றாலும் அவர்கள் அருமை மகன் செந்தில்குமாரை சடுதியில் பிரிவோம் என்று நினைக்கவில்லை ஐயா! ஆறவில்லை ஐயா, மனம் உமது பிரிவை ஏற்க மறுக்குதையா! நீங்கள் சுகயீனம் உற்றாலும் மனவலிமையோடு நீண்ட காலம் வாழ்வீர்கள் என்று நம்பியிருந்தோம் உங்களைப் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லை உங்கள் பிரிவுத் துயரில் கலந்து கொள்ள மனம் துடித்தாலும் பொறுப்புக்கள் கடமைகள் தடையாய் நின்றன அது தான் நினைவு மலரில் தன்னும் என் உள்ளத் துடிப்பை உங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

மாமா மாமி சகோதரிகளை கண் போல காத்து பாசத்துடனும் பரிவுடனும் கடமைகள் முடித்தீர்கள். ஆனால் உங்கள் குடும்பத்தை மறந்துபோனீர்களே.

ஊரில் கந்தசாமி கோயில் திருவிழா என்றால் உங்கள் வீடும் திருவிழாக் கோலம் தான். மாமியின் உடல் நலனில் கவனம் கொண்டு அவரையும் மச்சாளையும் (குலமதி) கோயில் திருவிழாப் பார்க்கக் பாசத்துடனும் கண்டிப்புடனும் அனுப்பி வைத்து நீங்களே தனித்து நின்று சமைத்து எங்கள் எல்லோருக்கும் அன்பாக விருந்தளிபீர்கள். கார் பிடித்து எல்லோரையும் "அன்னக்கிளி" படம் பார்க்க அழைத்து சென்று எங்கள் எல்லோருடனும் மகிழ்வுடன் இருந்தீர்கள்.

அடிக்கடி போனில் கதைத்து உறவு கொண்டாடுவீர்கள். மாமி (என் அம்மா) ஜேர்மனிக்கு வாருங்கள் உங்களை நான் பார்ப்பேன்" என்று ஆசையுடன் கூறுவீர்கள்! உறவுகள் நண்பர்களுக்கு திருமணங்கள் பொருத்தி திருமணங்கள் நடத்தி வைத்து உதவிகள் பல செய்தீர்கள்.

உங்கள் உடல் நலம் பெற வேண்டி எல்லாத் தெய்வங்களையும் பிரார்த்தனை செய்தேன் பலனில்லை!, உங்கள் ஆத்மா சாந்தியடையத் தன்னும் ஊரில் உள்ள எல்லாத் தெய்வங்களையும் பிரார்த்திக்கின்றேன்.

**சக்தி அருணாசலம், சிட்னி. அவுஸ்திரேலியா.**

2-10-2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு செய்தாய்? எங்குற்றாய்?

அன்பிற்கினிய செந்தில்

நீ பேச விரும்பி தொலைபேசியில் அழைக்கும்போது நான் இருப்பதில்லை. நான் பேச நினைத்த போது நீ பேசவில்லை. நீ சுகயீனமுற்ற நாள் முதலாய் உன்னை நேரில் பார்க்க என்று எண்ணுவதுண்டு. காலம் கைகூடவில்லை. காலம் கைகூடியபோது நீ காத்திருக்கவில்லை.

நடுநிசியில் உன் தொலைபேசிச் செய்தியைக் கேட்டு மகிழ்ததுண்டு. ஒரு நாளைக்குச் சந்திப்போம் என்று அடிக்கடி சொல்வாய். நீ சுய நினைவற்று இருக்கிறாய் என்ற போது அக்டோபர் மாதத்தில் குடும்பமாக வந்து உன்னைப் பார்க்கவேண்டும் என்றிருந்தேன். ஆயத்தமும் செய்தேன். நீ காத்திருக்கவில்லை.

மாமியின் மறைவுச் செய்தி கேட்டவுடன் ஜேர்மனிக்கு ஓடிவந்த எனக்கு உன் மறைவின் போது நேரில்வரமுடியாத பாவியாகிவிட்டேன். உன் நினைவு தினத்தில் வந்து அஞ்சலி செலுத்த ஆண்டவன் வழி விட்டானே என தேற்றிக்கொண்டேன்.

உந்தன் ஆசை முகம் மறக்கவில்லை. நேசம் மறக்கவில்லை தொலைதூரம் நம்மைப பிரித்துவிட்டது.

சிறு வயதில் நீயும் நானும் ஒன்றாகக் கூடிவிளையாடியதும் சண்டை போட்டதும் பின்னர் வாலிப வயதில் நெருங்கிப் பழகியதும் நெஞ்சில் உண்டு. நீ ஜேர்மன் சென்ற பின்னால் திருமணத்திற்கு வந்தபோது சந்தித்தேன். அதன் பின் மாமியின் மரணச்சடங்கிற்கு வந்தபோது சந்தித்தேன். இன்று மீண்டும் உன்னிருப்பிடத்தில் நான். உன் மறைவின் போது எனது தாயார் மருத்துவமனையில் இருந்தார். உன் செய்தியை எப்படிச் சொல்வது என்று எண்ணியபடி நீ கடும் சுகயீனமாக இருப்பதாகச் சொன்னேன். அவன் மூன்று மாதத்தில் எழும்பிவிடுவான் என்று அம்மா சொன்னபோது அது உண்மையாகக்கூடாதா என்ற ஏக்கமே மேலிட்டது.

எல்லோரையும் நீ ஏமாற்றிவிட்டாய். நேரில் பேசும்போதும் எப்போதும் மற்றவர்களை ஆறுதல்கூறி தேற்றி உன் உடல் நலம் தேறிய தோற்றத்தைக் கொடுத்துவிட்டு இன்று நீ போய்விட்டாய் ஐயா! எனி உன்னை எப்பிறப்பில் காண்போமோ. பெரிய மாமாவின் நினைவுகளில் அடிக்கடி மூழ்கிப்போவேன். இப்போது அவரோடு நீயும் ஒன்றாகிப்போனாய். உன் அனுபவ மொழியாக நீ சொன்ன வார்த்தைகளை என்றும் நினைவில் கொள்வேன்.

என்றும் உன் நினைவுடன்

தி. திருநந்தகுமார்

மைத்துனர் சிட்னி 07.10.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் கடந்து வந்த சிறிய தந்தையின் இரங்கல்

தம்பி!

நீ பார்த்தவர்களைக் கவர்ந்தாய். பழகியவர்களை ஆண்டாய். பின்பாதியில் மட்டும் ஏன் பறந்தாய்? நீ கால்தவறி பள்ளத்தில் விழவில்லை. ஐயா, நீ எம் உள்ளத்தில் விழுந்துவிட்டாய். இது உண்மை. நீ உதிர்ந்த செய்தி கேட்டு பூவில் விழுந்த பூகம்பமாய் நாம் அதிர்ந்தோம்.

அல்லல்பட்டோரின் அல்லல் தீர்த்தவனே! அல்லலுறும் மனைவி மக்களுக்கு என் சொன்னாய்? என்ன வைத்தாய்? விருதம் பல இருந்தாய். இன்னை ஈடேற்ற தன் காலடியில் விழுந்த உன்னை முருகன் கவர்ந்து விட்டானே! உன்னை உள்வாங்க முருகன் எண்ணியதேன் ஐயா! நீ எமக்கு செந்தில் ஆண்டவனையா!

உன் புன்னகை பூத்த முகம் எங்கே? எல்லோரையும் கவரும் கருணை எங்கே? பெருமை இல்லாத எளிமையும், எவரையும் கவரும் இனிமையும் உன்னிடத்தில் கொண்டவனே! உன் தாய் தந்தையர் உன்னைப் பெற்றெடுக்க என்னதவம் செய்தனரோ?

தினமும் இரவு பன்னிரண்டு மணிக்கு உன் அழைப்பு மணி அடிக்குமே! அப்போது உன் சுக துக்கங்களைப் பகிர்ந்துகொள்வாயே! உன் 'கோமா' செய்தி கேட்டபோதே மனமுடைந்து போனேனடா!

இந்த உலகை நரகம் என்றும், நல்லவர்க்கு இடமில்லையென்றும் விட்டுச் சென்றாயோ! ஒரு பல்லு விழுந்து போகக் கனாக் கண்டேனே! அது பலித்துவிட்டதே!

போரின் உக்கிரத்தால் உறவினர் நாம் எல்லாம் சிதறுண்டு போனேமே! உன் இறுதிக் கிரியையின்போதோ அல்லது உன் 31ஆம் நாள் கிரிகைக்கோ நேரில் வரமுடியாமல் தவிக்கிறேன் ஐயா!

உன்னை நம்பி வந்தவளும், உன் செல்லப்பிள்ளைகளும் தேற்றுவாரின்றி துடிக்கும் வேளை ஆண்டவனே அவர்களுக்கு துணை நிற்பார் என்று பிரார்த்திக்கிறேன். கூடிப் பிறந்த குலமதியும் தனித்துப் போனாளே!

நாம் எல்லோரும் சேர்ந்து உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**இணுவில் கந்தன் துணைநிற்பான்.**

**சித்தப்பா குடும்பத்தினர்.**
**அ. ஞானதுரை**
32 Kilkarney Drive, Howick. Auckland
New Zealand.
29/09/2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர்

யேர்மனிக்குப் புலம் பெயர்ந்தவர்களிற் தானும் தன்பாடும் என்று வாழாமல் எம்மினத்தவரினதும் எம் நாட்டினதும் அக்கறையோடு வாழ்ந்து பெருமை பெற்றவர் அமரர் திரு. செந்தில்குமார் அவர்கள். ஆரம்ப காலகட்டங்களில், உதவி வேண்டியோருக்கு மனமுவந்து உண்டி கொடுத்து, உறைவிடம் கொடுத்து ஆதரித்ததை எவரும் மறந்துவிடப் போவதில்லை. ஓய்வு என்ற சொல்லுக்கே இடமின்றி சுயதொழிலாக ,,செந்தூராஸ்,, என்ற சொந்த வியாபார நிறுவனத்தில் மட்டுமல்ல, எப்போதும் ஏதாவது செய்துகொண்டே இருக்கும் சுபாவம் கொண்டவர்: சுறுசுறுப்பு மிக்கவர். ஆசிய உணவுவகைகளை, தமிழ்த் திரைபப்பட ஒளிப்பேழைகளை தமிழர்மத்தியில் முதன்முதல் விநியோகித்த சிறப்பு இவரது நிறுவனத்துக் உண்டு.

இயன்றவகையில் சேவை மனப்பான்மையுடன் உதவிசெய்வதிலே திருப்தி காண்பவர். இவரால் நன்மை பெற்றோம், வளர்ச்சி கண்டோம் என்று சிலர் கூறுமளவுக்குத் தன்னாலியன்றவற்றைச் செய்த சேவையாளர். கலகலப்பாகப் பேசி உற்றாரும் மற்றாரும் நண்பரும் பெருமைப்பட வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

சுவேற்றா என்றழைக்கப்படும் தாம் வாழ்ந்த நகரிலே கோயில் அமைவதற்கும் தமிழாலயத் தோற்றத்துக்கும் முன்னின்று பாடுபட்டவர். சைவமும் தமிழும் வளர்வதற்கு எற்ற பணிகளைத் தளராது வழங்கி இங்கு வாழ் மக்களின் மனதிற் பதிந்தவர். குறிப்பாக , தமிழ்ச்சிறார்கள் தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கற்கவேண்டும் என்று அதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டு, தமிழாலயம் தோற்றம் பெறுவதற்கு ஆவனசெய்தோருள் இவரும் ஒருவராக நின்று அதில் வெற்றியும் கண்டார். தமது மக்கட்செல்வங்களுடன் அயலில் உள்ள எம்மவர் சிறார்களையும் ஒன்றிணைத்து தமிழாலயம் இயங்குவதைக் கண்டு அகமகிழ்ந்தார்.

முதலிற் சேர்ந்த ஆரம்ப வகுப்பு மாணவர்களிலே தமது புதல்விகள் கற்றதைக் கண்டு மகிழ்ந்தவர், பின்னாளில் இதே தமிழாலயத்தில் தம புதல்விகள் 11ம் ஆண்டைச் சிறப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவுசெய்து ஆசிரியைகளாகப் பணியாற்றுவதையும் கண்டு பெருமிதம் அடைந்திருந்தார். கடந்த 2007ல் எமது தமிழாலயம் பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடியபோது எம்மோடு வாழ்ந்து . அரங்கில் அமர்ந்திருந்து மாணவர்களின் கல்விஅறுவடையைக் கண்டு மகிழ்ந்திருந்தார். கலைநிகழ்வுகள் உட்பட அனைத்து நிகழ்வுகளிலும் தம்மக்களுடன் இணைந்து தமது ஆலோசனைகளையும் வழங்கினார் என்பதை நாம் அறிந்து அவரது தமிழ் - கலைப்பற்றை எண்ணிப் பெருமைப்படுகின்றோம்.

தமது மக்கள் நால்வரும் இத்தமிழாலயத்தில் தமிழ் கற்றது மட்டுமன்றி அவர்தம் புதல்விகளால் பரீட்சைகளில், தமிழ்த்திறன்போட்டிகளில் இத்தமிழாலயத்துக்குப் புகழும் கிடைத்தன என்பதை நாம் அறிவோம். தமிழ்க்கல்வி மட்டுமல்ல கலைவகுப்புகளுக்கும் புதல்விகளை அக்கறையோடு அனுப்பியமையால் அதன் அறுவடைகளைப் பல மேடைகள் கண்டிருக்கின்றன. எமது தமிழாலயத்தின் ஒரு பெற்றோராக இருந்து வளர்ச்சிக்கு ஆவனசெய்த ஒருவரை எமது தமிழாலயம் இழந்துள்ளது என வேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது இழப்பு அவர்தம் குடும்பத்தினருக்கு மட்டுமல்ல தமிழாலயத்தைப் பொறுத்தவரையிலும் ஒரு பேரிழப்பாகும்.

.. ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவரோ....?..

**ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.**

**நிர்வாகி**
**சு.கோபிநாத்**

**மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள்**
**தமிழாலயம் - சுவேற்றா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனக துர்க்கா

அகிலத்தை ஆழ்பவளே கனகதுர்க்கா!
ஆறுதல் தாருமம்மா கனகதுர்க்கா!
இன்பமயம் ஆனவளே கனகதுர்க்கா!
ஈடிணையற்றவளே கனகதுர்க்கா!
உன்னையே நம்பினோம் கனகதுர்க்கா!
ஊக்கம் தாருமம்மா கனகதுர்க்கா!
எல்லாம் நீயறிவாய் கனகதுர்க்கா!
ஏக்கம் தீர்த்தருள்வாய் கனகதுர்க்கா!
ஏறுமயில் குமரன்தாயே கனகதுர்க்கா!
ஐங்கரன் தாயே கனகதுர்க்கா!
ஐயம் தீர்த்தருள்வாய் கனகதுர்க்கா!
ஒளிமயம் ஆனவளே கனகதுர்க்கா!
ஓங்காரரூபிணியே கனகதுர்க்கா!
ஔடதம் தருபவளே கனகதுர்க்கா!

(அகிலத்தை)

கனகதுர்க்கா! கனகதுர்க்கா!! கருணை புரிவாள் கனகதுர்க்கா!
கண்ணினின் தங்கையாம் கனகதுர்க்கா கடைக்கண் திறப்பாள்
கனகதுர்க்கா!
கஜமுகன் அன்னையாம் கனகதுர்க்கா கஷ்டங்கள் தீர்ப்பாள்
கனகதுர்க்கா!
சங்கரன் துணைவியாம் கனகதுர்க்கா சங்கடம் தீர்ப்பாள்
கனகதுர்க்கா!
சரவணன் தாயாம் கனகதுர்க்கா சகலமும் அருள்வாள்
கனகதுர்க்கா!
(கனகதுர்க்கா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியின் வடிவமாம் கனகதுர்க்கா சர்வமும் அவளே
கனகதுர்க்கா!
சாந்த சொரூபியாம் கனகதுர்க்கா சாதனை புரிவாள்
கனகதுர்க்கா!
சிம்மவாகினி கனகதுர்க்கா சிந்தையில் உதிப்பாள்
கனகதுர்க்கா!
சீரடியார்க்கு கனகதுர்க்கா சிவபதம் அருள்வாள் கனகதுர்க்கா!
சுவெற்றாவில் உறையும் கனகதுர்க்கா சுகபலம் அருள்வாள்
கனகதுர்க்கா!
(கனகதுர்க்கா)

செந்தூரப் பொட்டுடன் கனகதுர்க்கா சிறப்பாய் மிளர்வாள்
கனகதுர்க்கா!
சேயாய் வருவாள் கனகதுர்க்கா சேவடி பணிந்தோம்
கனகதுர்க்கா!
சொந்தம் நீயே கனகதுர்க்கா சொற்றுணை நீயே கனகதுர்க்கா!
சோதியும் நீயே கனகதுர்க்கா சோகம் தீர்ப்பாள் கனகதுர்க்கா!
சௌந்தர்ய நாயகி கனகதுர்க்கா சௌபாக்கிய தாரணி
கனகதுர்க்கா!
தாயாய் காப்பாள் கன்கதுர்க்கா தந்தோம் எம்மையே
கனகதுர்க்கா!
சேவடி சரணம் கனகதுர்க்கா சரணம் சரணம் கனகதுர்க்கா.
(கனகதுர்க்கா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு சுவெற்றா அம்பிகையின் மேல் அன்பு கனிந்து பாடிய திருப்பொன்னூஞ்சல்

## காப்பு

ஆனைமுகமும் அங்குச பாசமும் ஏந்திடும்
ஐங்கரனே கணபதியே அருட் கொழுந்தே
மேருகிரி மலைமீ தெழுதிய புனிதக் கொம்பா
ஊருகின்ற பெருச்சாளி ஏறும் நாதா
மன்னவனே ஜேர்மனி சேர் சுவெற்றாவில்
குடிகொண்ட அம்பிகையாள் மருவு மூஞ்சல்
என்னுள்ளதே அருட்பாவாய் மலரும் வண்ணம்
ஏகதந்தா நின் கழலே காப்பதாமே.

## நூல்

தொன்மைதரு மண்டலங்கள் துதிக்கநின்ற
மின்னிகர் பொன் கொடி நுண்ணிடையாளே
தண்ணார் தமிழின் சுவை அளித்து
புண்ணிய பேறளி பூரணி பராபரை
புன்மைதரு நெறி நீங்கிப் புவனமெல்லாம்
பொழிகருணை நலஞ்சிறக்க கோயில் கொண்டே
செம்மைதரு சுவெற்றாவில் மேவு
கனகதுர்க்கா அம்பிகையே ஆடீரூஞ்சல்

அம்பரம் அனல்கால் நிலஞ்சலமாகி நின்ற
அம்பலக் கூத்தனோடு அருகினில் பாதிசேர்ந்து
கழல் பயின்ற ஆன்மாக்கள் களிக்க நல்கி
தவம் பயின்ற பலன் கொடுத்துக் காக்கும்
குலம் பயின்ற குன்றெறி குழவியை யேந்திக்காத்த
குளிர்பயின்ற ஜேர்மன் நாட்டில்
வலம்பயின்ற சுவெற்றாவில் மேவு
கனகதுர்க்கா அம்பிகையே ஆடீரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலெழு மிரவிகோடி கால் சீத்து
மடலவிழ் கமலவூர்தி பள்ளிகொள் பரந்தாமன்
உடன்பிறந்த சோதரியே துரந்தரியே
நல்லவிசை வலம்புரியால் ஞாலம் பூத்து
நளினமலர் கரத்தில் தாங்கும் நேமியாலே காத்து
துல்லியமாம் ஆற்றுடனே வயலும் சூழ்ந்து
வல்ல தமிழ் மக்களுறை சுவெற்றாவில் மேவு
கனகதுர்க்கா அம்பிகையே ஆடீரூஞ்சல்

தேன் பொலியும் மறைநான்கும் தூண்களாக
சிவம்பொலியும் ஆகமங்கள் நாண்களாக
அரிமாபொலியும் அண்டமெல்லாம் பீடமாக
அருள்பொலியும் அறுபத்துநாற்கலையும் மாடமாக
கோன்பொலியும் தத்துவங்கள் விதானமாக
குணம்பொலியும் நாற்கதிகள் தீபமாக
செழுமைபொலி சுவெற்றாவில் மேவு
கனகதுர்க்கா அம்பிகையே ஆடீரூஞ்சல்.

உளமுணர்ந்த சிவத்தினுள்ளே சக்தியாகி
உயிர்பலியும் சிருஷ்டி முதல் ஐந்து மாற்றி
மகிஷ முகத்தனை வதைத்து நின்று
வணங்குமடியார்க்கினிய துணைவியாகி
கருங்குழல் செவ்வாய்க் கார்மயிலாகி
இளமையில் இகபரம் அளித்துக் காக்கும்
வளமைமிகு சுவெற்றாவில் மேவு
கனகதுர்க்கா அம்பிகையே ஆடீரூஞ்சல்

விண்குளிர் மேகத்தில் சூரிய கதிரோவென்ன
மிளர்சோலை வனத்தினிலே குழைகளாட
கண்குளிர் இரத்தினங்கள் துலங்கியாட
துன்னுபொன் ஆடைத் தொடித்தோளாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டூரவம் கண்டு களிப்புடன் ஆட
சுந்தரம் பொருந்துநற் சுவெற்றாவில் மேவு
கனகதுர்க்கா அம்பிகையே ஆடீரூஞ்சல்.

கந்தருவர் கிம்புருடர் கானமூட்ட
நான்முகனும் நாயகனும் புகழ் பாராட்ட
சேர்ந்தநல் குழவிகளாம் அன்புகூட்ட
கலைமகளும் நாரதனும் கீதம்பாட
முனிவரொடு வானவரும் முழவுதீட்ட
அன்பிலொரு சோதரனாம் வரிசைநாட்ட
செழியர் பிரான் திருமகளாய் சுவெற்றாவில் மேவு
கனகதுர்க்கா அம்பிகையே ஆடீரூஞ்சல்.

சங்கரர்க்கு மனையாளாய் பங்னு தாங்கி
பொங்கிவரும் புதுவாழ்வு பெருகிவர
தங்கு புகழவதாரச் செல்வியாகி
சிங்கமதில் ஏறிவந்து சங்கரித்து மகிஷனையும்
பொங்கு சராசரமனைத்தும் புன்மை நீங்க
அங்குரி தொழுவார் அகத்தமர்ந்து அபயம் நல்கி
மங்களஞ் சேர் சுவெற்றாவில் மேவு
கனகதுர்க்கா அம்பிகையே ஆடீரூஞ்சல்.

திரிபுர தகனஞ்செய்த தில்லயிலாடும் கூத்தன்
அருகினில் சேர்ந்த சேவடித்திறம் அறியோம்
பாடவரு பொருளறியோம் நெறியறியோம் பரவு பூஜை
பண்ணுமுறை தெரியோமை பரமானந்தம்
கூடவரந் தருவதற்காய் கோயில் கொண்டு
தருமின்ப மோட்சமெல்லாம் எமக்கருள
சுருதி நிறை சுவெற்றாவில் மேவு
கனகதுர்க்கா அம்பிகையே ஆடீரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகுமிடர் தீர்ப்பவளே ஆடீரூஞ்சல்
பிழைபொறுத்துக் காப்பவளே ஆடீரூஞ்சல்
செழுத்தணிக்கும் சங்கரியே ஆடீரூஞ்சல்
அறுகேறும் பெருமாட்டி ஆடீரூஞ்சல்
கருக்கவலை ஒழிப்பவளே ஆடீரூஞ்சல்
கஜமுகனைத் தந்தவளே ஆடீரூஞ்சல்
சுருதம் மிகு சுவெற்றாவில் மேவு
கனகதுர்க்கா அம்பிகையே ஆடீரூஞ்சல்.

## வாழி

அணிநான்கு வேதமுடன் அறங்கள் வாழி
அமைந்த இதிகாச புராணங்கள் வாழி
பிணியறுக்கு கையிலேந்து வில்லுசங்கு சக்கரமும் வாழி
திண்மையொடு தீபமேற்று ஜெயந்திநாத சர்மா வாழி
அணங்கயர்ந்து மகிழ்ந்து நிற்கும் அடியார் வாழி
பார்மகளும் பூமகளும் வாழி வாழி
சேர்புகழாம் திருநகரம் சுவெற்றா வாழி
கனகதுர்க்கா அம்பாளின் திருத்தாள் வாழி வாழி

## மங்களம்

கஜகர்ண கணபதிக்கு மங்களம்
ஏறுமயில் ஏறி வரு வேலனுக்கு மங்களம்
எருதேறும் பெருமானுக்கு மங்களம்
நலம்புரி வைரவ நாதனுக்கு மங்களம்
பாம்பணை அறிதுயில் கொள் திருமாலுக்கு மங்களம்
நளினமலர் புவன சுந்தரிக்கு மங்களம்
அருள்புரியும் ஐயப்ப சாமிக்கு மங்களம்
இறைவி சொர்ண கனகதுர்க்கைக்கு மங்களம்! மங்களம்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கள ஆரத்தி

ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய என தினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா - ஓம் ஸ்ரீ ஜெய ஜெய

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் மறைய-அம்மம்மா தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம் ஸ்ரீ ஜெய ஜெய

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரமருள்வாய் - அம்மம்மா ஈஸ்வரி வரமருள்வாய்

கரங் குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய்-ஓம் ஸ்ரீ ஜெய ஜெய

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் - அம்மம்மா
கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழ காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே - ஓம் ஸ்ரீ ஜெய ஜெய
நமஸ்காரம் கூறி கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து - அம்மம்மா நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா - ஓம் ஸ்ரீ ஜெய ஜெய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம்

ராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம்

ஏது பயம் இனி ஏதுபயம் ஸ்ரீராம ஜெயம் சொல்ல ஏது பயம்

காவல் தரும் ஸ்ரீராம ஜெயம் அந்த மாருதிக்கு சொல்லு ராமஜெயம்
ஏதுபயம் இனி ஏதுபயம் ஸ்ரீராம ஜெயம் சொல்ல ஏது பயம்
(ராமஜெயம்)

துன்ப மெல்லாம் அவன் வேரறுப்பான் - துணை
தோள் கொடுத்தே உனை தாங்கிடுவான்
காற்றுமழை புயல் யாவினிலும் - உயிர்
காவலென நின்று காத்திடுவான்
(ராமஜெயம்)

வெற்றிலையால் ஒரு மாலைகட்டி - குளிர்
வெண்ணெய்யினால் அவர் மார்பை தொட்டு
பூஜை செய்தால் வரும் புண்ணியமே - நீ
காத்திருப்பாய் என்றும் கண்ணியமே
(ராமஜெயம்)

கொடுப்பதிலே அவன் வள்ளலம்மா - ராமன்
குடியிருக்கும் திருக் கோயிலம்மா
தங்கமம்மா அவன் தங்கமம்மா - மனத்
தைரியமே தரும் கோலமம்மா
(ராமஜெயம்)

அஞ்சனையின் தவப் புத்திரனாம் - அந்த
ஆதிசிவன் கனியானவனாம்
வீசிவரும் குளிர் சந்திரனாம் - தமிழ்
காண்டத்தில் அவன் சுந்தரனாம்
(ராமஜெயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயுவென வரும் தெய்வமடி - அவன்
வான் மழையே தரும் மேகமடி
மஞ்சள் நிறம் அவன் கண்களடி - அந்த
மாதவ ராமனின் தூதனடி

(ராமஜெயம்)

சந்தனமே அவன் வாசனையாம் - ராம்
நாமமொன்றே அவன் யோசனையாம்
வெற்றிகளே அவன் வேதங்களாம்
சித்தி தரும் திருப் பாதங்களாம்

(ராமஜெயம்)

பஞ்சமுகம் தனைப் பார்த்திருப்போம் - அவன்
பாதம் சரண் என வாழ்ந்திருப்போம்
தீமைகளை அது தீயிலிடும் - நல்ல
தேன் சுவையாய் மண்ணணில் வாழ்வு தரும்

(ராமஜெயம்)

வாலிருக்கும் மணி தானிருக்கும் - அவன்
பேருரைத்தால் பிணியே பறக்கும்
ஆழ்கடலும் அவன் ஏவல் செய்யும் - அந்த
ஏழுலகும் அவன் பேர் புகழும்

(ராமஜெயம்)

சந்திரனாம் நல்ல சேகரனாம் - எங்கள்
சந்திர சேகர சுவாமிகளாம்
மாருதியாம் எங்கள் மாருதியாம் - மண்ணில்
மறு உருவாகிய மாருதியாம்
போற்றி நிற்போம் தினம் போற்றி நிற்போம் - அந்த
புண்ணியன் நாமத்தை போற்றி நிற்போம்
ராமஜெயம் என பாடி நிற்போம் - நித்தம்
வாழ்வில் ஜெயம் கண்டு வாழ்ந்திருப்போம்

(ராமஜெயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருச்சிற்றம்பலம்*



தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாழ் வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கொடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பன்யான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகி பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தனியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நனியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வலவினையென் தன்னை

மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தம் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் காடையாய்க் கிடந்த அடியேற்கு

தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெரும் ஐயனே
ஆதியென அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப்புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானர்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையிட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு ஏத்தப் பணிந்து

*திருச்சிற்றம்பலம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி தோத்திரம்

வாழ்வும் ஆனவள் துர்க்கா வாக்கும் ஆனவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயு மானவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உலகை யீன்றவள் துர்க்கா உமையு மானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

செம்மை யானவள் துர்க்கா செபமு மானவள்
அம்மை யானவள் அன்புத் தத்தை யானவள்
இம்மை யானவள் துர்க்கா இன்ப மானவள்
மும்மை யானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உயிரு மானவள் துர்க்கா உடலு மானவள்
உலக மானவள் எந்தன் உடமை யானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தாங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

குருவு மானவள் துர்க்கா குழந்தை ஆனவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமானவள்
திருவு மானவள் துர்க்கா திரசூலி யானவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னை காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலா வல்லிமாலை



ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள்என் னுள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாராதிடர்

வெண்டாமரைக்கன்றி நின்பதம்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சகமேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணிந்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகலகலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாபமயிலே
சகலகலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகலகலாவல்லியே.

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகலகலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீண்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகலகலாவல்லியே.

சொல்விற்பனமு மவதான
முங் கவி சொல்லவல்ல
நல்வித்தையுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகலகலாவல்லியே.

சொற்கும் பொருட்குமுயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகலகலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பினுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகலகலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லைச் செய் நன்றி கொன்ற மகற்கு"**


திருவள்ளுவர் கூற்றை முன்நிறுத்தி, எமது குடும்பத்தலைவனின் பேர் இழப்பிற்கு நேரில் வருகை தந்தும், தொலைபேசி மூலம்ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தது மட்டுமல்லாது, அவரது கடைசி யாத்திரையின் இறுதிக்கிரிகைகளிலும் பங்கு கொண்டோருக்கும், வழிபாடுகள், பிரார்த்தனைகள் நிகழ்த்தியோருக்கும் மேலும் உணவளித்து உதவியவர்களுக்கும் மற்றும் ஏனைய உதவி புரிந்தவர்களுக்கும், இம்மலரை அச்சிட உதவி புரிந்தவர்களுக்கும், அச்சிட்டவர்களுக்கும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயம் கலந்த நன்றியை இம்மலரின் ஊடாக எமது குடும்பத்தினர் சார்பில் மனமார்ந்த நன்றியை நல்கிக் கொள்கின்றோம்.

**இவ்வண்ணம்**

**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவிருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கின்றாய்
அதை நீ வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொவருடையதாகிறது.
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.



இந்த மாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

அச்சுப்பதிப்பு: RAJE druck Neu Str.53, 58256 Ennepetal. Germany.
ராஜ் பதிப்பகம் Tel.: 02333/60 27 96 Mobil: 01729567646 E.Mail: info@rajedruck.de

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org